[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

III,—CALLING ATTENTION TO THE NON-PAYMENT OF THE REBATE AMOUNT TO THE WEAVERS OF CO-OPERATIVE SOCIETIES IN MADURAI TOWN.

MR. SPEAKER : Now we will take up the motion under Rule 40 given notice of by the hon. Member Srimathi Lakshmikantham.

* SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : மதிப்புற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, மதுரை கூட்டுறவு சங்கங்களுக்கு சென்ற மூன்று மாத காலமாக ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கடன் தொகைகளும், நெசவாளர் சங்கங்களுக்குச் செஸ்மூலம் கிடைக்க வேண்டிய தொகைகளும் கொடுக்கப்படாமல் கூட்டுறவு பாங்கே வைத்துக்கொண்டிருப்பதனாலே, 9 மாதங்களாக ரிபேட் தொகை கிடைக்காமல் இருப்பதால் நெசவாளர்கள் வேலை கிடைக்காமல் கூலி கிடைக்காமல் கஷ்டப்படக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை நான் கொஞ்சம் அறிவேன். அதாவது சர்க்காருடைய பணத்திற்கு உத்திரவாதம் வேண்டுமென்று மதுரை ஜில்லா கூட்டுறவு பாங்கின் உயர்தர அதிகாரிகள் இந்தக் கூட்டுறவுச்சங்கங்கள் பாங்கின் சிப்பந்திகளில் ஒருவரை முழு நேர ஊழியராகப் போட்டுக் கொள்ள வேண்டுமென்று ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சங்கத்தின் தலைவர்கள் பாங்கின் சிப்பந்தியை முழு நேர ஊழியராகப் போட்டுக் கொள்ள வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளவில்லையாதலால், இந்த இருவர்களுக்குமிடையே உள்ள தகராறினால் கஷ்டப்படுபவர்கள் இந்த நெசவாளர்கள் தான் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நெசவாளர்கள் அன்றாடம் வேலை செய்தாலொழிய அவர்கள் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்கு வேறு வழி கிடையாது. எனவே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்துள்ள நெசவாளருக்கு தினசரி வேலை கொடுத்தால்தான் அவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கு வழி ஏற்படும். கூட்டுறவு பாங்க் அதிகாரிகளுக்கும் இந்த சங்கத்தின் தலைவர்களுக்கும் இடையே இருந்து வருகிற அபிப்பிராய பேதமானது நீக்கப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய முக்கியமான குறிக்கோள். சர்க்காருடைய பணத்திற்கு உத்திரவாதம் வேண்டியதுதான். இருவருக்கும் இடையேயுள்ள அபிப்பிராய பேதம் நீக்கப்பட்டு, கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்கப்படும் எல்லாவிதமான தொகைகளும் கொடுக்கப்பட்டு, இந்த சொஸைட்டிகள் நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது சர்க்காருடைய கொள்கையானது கூட்டுறவுச் சங்கங்களை அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான். செஸ் நிதி மூலமாக ஏற்பட்டுள்ள சங்கங்களுக்கு மட்டும்தான் இந்த நிபந்தனை ஏற்பட்டிருக்கிறதேயொழிய, அதற்கு முன்பே ஏற்பட்டுள்ள சங்கங்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது. இந்த இரண்டு சங்கங்களுக்கும் இப்படி வேற்றுமை காட்டப்பட்டு வருவதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மதுரை ஜில்லா சொஸைட்டிகளை திண்டுக்கல் பகுதி, மதுரைப் பகுதி, என்று இருவிதமாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த இரு பகுதிகளிலேயுமே வித்தியாச மனப்பான்மை காட்டப்பட்டு வருகிறது. திண்டுக்கல் பகுதியில் செஸ் மூலமாக நடக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, இந்த பாங்கு சிப்பந்தியை முழுநேர ஊழியராக போட்டுக்கொள்ள வேண்டுமென்பது வற்புறுத்தப்படாமலிருக்கிறது. ஆனால் மதுரை சங்கங்களைப் பொறுத்த வரையிலோ அது வற்புறுத்தப்படுவதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. சங்கங்களுக்கு பாங்கு சிப்பந்தியை முழுநேர ஊழியராகப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், வேற்றுமை இல்லாதபடி அது எல்லாச் சங்கங்களுக்கும் ஒரே முறையில் இருக்க வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். புதிய கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதற்கு இப்பொழுது இது மிகவும் தடையாக இருக்கிறது. பல நெசவாளர்கள் ஒன்று கூடி பங்குத் தொகையைக்

கட்டி, ரெஜிஸ்தர் செய்ய வேண்டுமென்று சொன்னாலும்கூட, ரெஜிஸ்தர் செய்யப்படாமல் பல சங்கங்கள் இருந்து வருகின்றன. சர்க்காருடைய பணத்திற்கு உத்திரவாதம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது முக்கியமாக இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங்கள் நசிந்துபோய் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பங்கு தொகை கட்டியிருப்பவர்களுக்கு, புதுச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கேயிருந்து சென்ற பிறகு பாங்கு அதிகாரிகளைப் பார்த்துப் பேசினேன். இருவருக்கும் இடையேயுள்ள அபிப்பிராய பேதத்தை நீக்கியாவது, செஸ் நிதி மூலமாக ஏற்படுத்தியிருக்கிற சங்கங்களுக்குப் பணத்தைக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னேன்.

Mr. SPEAKER : இது 40-வது விதியின் படி கொண்டுவந்துள்ள பிரேரேபணை. கனம் அங்கத்தினர் இதைப்பற்றி 10 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டார்கள். சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : தீபாவளி நெருங்கிவிட்டது. நெசவாளர்களுக்கு அன்றாட வேலை கொடுத்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்வதுடன் புதிய கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களையும், கூட்டுறவு இலாகா டைரக்டரையும் கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : 40-வது விதிப்படி அமைச்சரைத் தான் கேட்டுக்கொள்ள முடியும் ? கூட்டுறவு இலாகா டைரக்டரை எப்படி கேட்க முடியும் ?

THE HON. SRI V. RAMAIAH : Sir, from 1953 onwards, schemes for the development of handloom industry are being financed by the Government of India from the Handloom Cess Fund and not by the State Government from their own funds. The payment of rebate to the weavers' societies on the sales of handloom cloth is one among the schemes financed from the Handloom Cess Fund. The expenditure on the disbursement of rebate to the weavers' co-operative societies is regulated by the allotment of funds made by the Government of India every year for the purpose. For the year 1957–58, the Government of India allotted a sum of Rs. 71 lakhs to this State towards the rebate scheme. With this grant of Rs. 71 lakhs, it was possible to settle the claims of the weavers' societies in the State for rebate only up to September 1957. The outstanding claims subsequent to September 1957 could not therefore be settled promptly. These claims have had to be settled from the allotment of Rs. 45 lakhs to be made by the Government of India for the rebate scheme during 1958–59. This allotment for 1958–59 was made by the All-India Handloom Board only in July 1958. In view of the delay in the allotment by the All-India Handloom Board, the Government had to sanction advances of Rs. 10 lakhs in April 1958 and Rs. 15 lakhs in July 1958 from the State funds to the Registrar of Co-operative Societies in anticipation of the grant from the Government of India to enable him to meet the claims of the societies at least in part. With these advances from the State funds and also the grant of Rs. 20 lakhs since available from the allotment of Rs. 45 lakhs for 1958–59,

3rd November 1958] [Sri V. Ramaiah]

the Registrar of Co-operative Societies had to take steps to disburse rebate in the societies in the State for the period subsequent to September 1957. He has since settled the claims in all the districts up to end of January 1958. With the balance of funds available from the allotment of Rs. 45 lakhs for 1958–59 the Registrar of Co-operative Societies can meet the claims for the two months, February and March 1958. The claims of societies in the Madurai circle for the two months, February and March 1958, which amount to Rs. 1·43 lakhs are under scrutiny and will be settled shortly.

The societies in the State including those in the Madurai circle have so far preferred claims only up to July 1958. It may be seen from what has been stated so far, that the claims of the weavers' societies in the Madurai circle for the months from April to June 1958 amounting to Rs. 2·26 lakhs could not be sanctioned for want of funds from the Government of India. The Government have already addressed the Planning Commission and the Government of India to increase the allotment for Rebate Scheme for 1958–59 by an additional allotment of Rs. 35 lakhs. On this additional allotment being made, the claims of the societies in the State for rebate for the period from April 1958 will have to be settled.

I may mention here that the Government have been alive to the need for the societies being assisted to proceed with their production uninterruptedly notwithstanding the non-payment of rebate to them. The Deputy Registrars of Co-operative Societies have been instructed to arrange with the local Central Co-operative Banks to allow special accommodation to the weavers' societies pending the receipt by the societies of the rebate due to them. The Central Banks will be sanctioning cash credit to the weavers' societies to be recouped at the time of disbursement of rebate. In the Madurai district, the Director of Handlooms recently discussed the question with the Madurai Central Bank and impressed on the bank the need to see that the societies in the district are not hampered for want of funds. In view this arrangement, there is no difficulty for societies in the Madurai district in getting working capital loan from the Central Bank. In the circumstances, there is no reason for any apprehension that the delay in the payment of rebate, results in unemployment and starvation among the weavers in Madurai town.

IV.—ANNOUNCEMENTS.

(1) OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT) BILL, 1958.

MR. SPEAKER : The following motion has been passed by the Council on 1st November 1958 :

" That the concurrence of the Legislative Assembly be obtained for setting up a Joint Select Commitee of both the Houses consisting of 24 members (16 members of the Legislative Assembly